# புரட்சித் தலைவர்

# எம்.ஜி.ஆர்



என். ரமேஷ்

Scanned with CamScanner

# புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்

## பிறப்பும் - இளமைப் பருவமும்

இலங்கையில் வசித்து வந்த கோபாலன் மேனன், சத்யபாமா தம்பதியினரின் பூர்வீகம் கேரள மாநிலம் ஆகும். அத்தம்பதியினருக்கு காமாட்சி, சுமத்ரா என்ற இரு பெண் குழந்தைகளும், பாலகிருஷ்ணன் மற்றும் சக்ரபாணி என்ற இரண்டு ஆண் குழந்தைகளும் இருந்தனர்.

அவர்களுக்கு 1917ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் தேதி ஐந்தாவதாக ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு பெற்றோர் ராமச்சந்திரன் என்று பெயரிட்டனர். அக்குழந்தையே பின்னாளில் அனைவராலும் எம்.ஜி.ஆர் என்று போற்றப்பட்டது.

ஐந்து குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் இறந்து விட்டன. எஞ்சியிருந்தவர்கள் காமாட்சி, சக்ரபாணி மற்றும் ராமச்சந்திரன். கோபாலன் மேனன் தனது 36வது வயதிலேயே மரணம் அடைந்தார். எனவே சத்யபாமா, தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு கேரளா வந்தடைந்தார். அங்கும் அவரை ஆதரிக்க யாருமில்லை.

எனவே சத்யபாமா தனது இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு கும்பகோணத்திற்கு வந்து குடியேறினார். சத்யபாமாவின் உறவினரான வேலுநாயர் என்பவரே அக்குடும்பத்தை ஆதரித்து வந்தார்.

Scanned with CamScan

சக்ரபாணியும், ராமச்சந்திரனும் கும்பகோணத்திலுள்ள ஆனையடிப் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். குழந்தைகள் இருவரும் சிறுவர்களாக இருந்தனர். வேறு ஆண் யாருமில்லாத குடும்பம் வறுமையால் தவித்தது.

தன் குழந்தைகள் மூலமாகத்தான் ஏதேனும் வருமானத்திற்கு வழி தேட வேண்டும் என்று முடிவெடுத்தார் சத்யபாமா. எனவே சக்ரபாணிக்கு 12 வயதும், ராமச்சந்திரனுக்கு 6 வயதும் ஆனபோதே அவர்கள் பள்ளியிலிருந்து விலக வேண்டிய சூழ்நிலை உருவானது.

சக்ரபாணியும், ராமச்சந்திரனும் நல்ல நிறமும், அழகான முக அமைப்பும் கொண்டிருந்ததால் அவர்களை நாடகங்களில் நடிக்க வைக்கலாம் என்று தீர்மானித்தார் சத்யபாமா.

## அ.தி.மு.க உதயம்

தி.மு.க.விலிருந்து எம்.ஜி.ஆர் விலக்கப்பட்டதால் அவரது அரசியல், சினிமா வாழ்க்கை அனைத்தும் முடிந்துவிட்டதாக பலர் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் எம்.ஜி.ஆர். தனது ஆதரவாளர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு புதிய அரசியல் கட்சியை நிறுவினார்.

1972ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தான் உருவாக்கிய கட்சிக்கு அண்ணாவின் நினைவாக, 'அண்ணா

Scanned with CamScan

திராவிட முன்னேற்ற கழகம்' என்ற பெயரைச் சூட்டினார் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. விற்கு 'இரட்டை இலை' சின்னம் கிடைத்தது. கூடவே அவரது சினிமா வாழ்க்கையும் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

அ.தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்தே தமிழகமெங்கும் அக்கட்சி எண்ணிப் பார்க்க முடியாத வளர்ச்சியைப் பெற்றது. 1973ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் தேதி திண்டுக்கல் தொகுதியில் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத்தேர்தலில் அக்கட்சி பெற்ற வெற்றி அதற்குச் சான்றாகும்.

அடுத்து 1974ஆம் ஆண்டு புதுச்சேரி சட்ட மன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில், 23 தொகுதிகளில் போட்டியிட்ட அ.தி.மு.க 12 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

1974-ல் நடைபெற்ற கோயம்புத்தூர் சட்டமன்ற இடைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட்ட சி.அரங்கநாயகம் வெற்றி பெற்றார். அ.தி.மு.க.வின் மக்கள் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே வந்தது. 1974ஆம் ஆண்டு தமிழகத்தில் அரிசி பற்றாக்குறை ஏற்பட்டது. எம்.ஜி.ஆர் அதைக் கண்டித்து அ.தி.மு.க சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.

1975ஆம் ஆண்டு அப்போதைய பிரதம மந்திரி இந்திரா காந்தி, பல்வேறு அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தியாவில் நெருக்கடி நிலையை அமல்படுத்தினார். மாநிலக் கட்சிகளுக்கு ஏதேனும் இடையூறு நேரிடலாம் என்று கருதிய எம்.ஜி.ஆர், தனது அ.தி.மு.க. வை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தேசியக் கட்சியாக மாற்றினார்.

Scanned with CamScan

# தமிழக முதல்வரானார்

1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலும், தமிழகச் சட்டமன்ற தேர்தலும் வந்தது. தி.மு.க அரசைக் கலைத்த இந்திரா காங்கிரசுடன் எம்.ஜி.ஆர் கூட்டணி வைத்தார். தி.மு.க., ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்தது.

எம்.ஜி.ஆர் தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். எம்.ஜி.ஆரை எதிர்த்து தி.மு.க.வும் பிரச்சாரம் செய்தது.

தி.மு.க. பிரச்சாரம் செய்த மேடைகளில் எம்.ஜி.ஆரைப் பற்றி பலர் பல விமர்சனங்களைக் கூறினார்கள். அதாவது, "எம்.ஜி.ஆருக்குப் பள்ளிப்படிப்பு இல்லை. அவர் சினிமா நடிகர் மட்டுமே. ஆட்சியைப் பற்றியோ, பொருளாதாரத்தைப் பற்றியோ எதுவும் தெரியாத எம்.ஜி.ஆர் எப்படி நல்லதொரு ஆட்சியைத் தரமுடியும்?" என்பன போன்ற பல குற்றச் சாட்டுக்கள் எழுந்தன.

ஆனால் எம்.ஜி.ஆர் தான் சந்தித்த மக்களிடம் தனது நிலைமையை விளக்கி நேரடியாகப் பிரச்சாரம் செய்தார்.

"என்னைவிட பிறருக்குப் பொருளாதாரம் பற்றி அதிகம் தெரிந்திருக்கலாம். காரணம் அவர்களில் பெரும்பாலானோர் முந்தைய ஆட்சியில் அமைச்சர்களாக விளங்கியவர்கள். ஒவ்வொரு குடும்பமும் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை ஏதேனும் ஒரு துறையில் முதலீடு செய்தால் அவர்கள் குடும்பம் பொருளாதாரத்தில் மேம்படும்! இதுவே நான்

Scanned with CamScan

கண்டு கொண்ட பொருளாதாரக் கொள்கை!" - என்று மிக எளிமையான விளக்கம் அளித்தார்.

மேலும், "அ.தி.மு.க.வுக்கு வாய்ப்பளித்தால் ஊழல் இல்லாத ஆட்சி, ஏழை மக்களுக்குப் பாதுகாப்பு,. எல்லாருக்கும் எல்லாமும் கிடைத்திடும் நீதி என்றொரு ஆட்சியைத் தருவேன்" என்று ஏழை மக்களிடம் பிரச்சாரம் செய்தார் எம்.ஜி.ஆர்.

தேர்தல் வந்தது. அ.இ.அ.தி.மு.க 126 இடங்களில் வெற்றிபெற்று முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது. எம்ஜிஆர் அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர், 1977ஆம் ஜூலை மாதம் 4ஆம் தேதி முதல் முறையாக தமிழக முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

## பொற்கால ஆட்சி

எம்.ஜி.ஆர், தான் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றவுடன் ஏழை மக்களின் நலனிலேயே அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கினார். தேர்தல் பிரச்சாரத்தில் தான் அளித்த வாக்குறுதிகள் ஒவ்வொன்றையும் நிறைவேற்ற முயற்சியை மேற்கொண்டார்.

விவசாயப் பெருங்குடி மக்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின்சாரக் கட்டணம் செலுத்தினால் போதும் என்று அறிவித்தார் எம்.ஜி.ஆர்.

விவசாயத்திற்குத் தேவையான உரம், விதைநெல் போன்றவற்றின் விலையில் எல்லாம் சலுகைகள் வழங்கினார்.

நியாய விலைக் கடைகளில் மக்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய் போன்ற அனைத்துப் பொருள்களின் விலையையும் குறைத்தார்.

Scanned with CamScan

# சத்துணவுத் திட்டம்

எம்.ஜி.ஆர் தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று நிறைவேற்றிய பல திட்டங்களுள் மகத்தான திட்டமாகப் போற்றப்படுவது ஏழைக் குழந்தைகளுக்கான 'சத்துணவுத் திட்டம்' ஆகும்.

எம்.ஜி.ஆர் தன் இளமைக் காலத்தில் வறுமையின் கொடுமையை அறிந்திருந்தார். எனவே தான் முதலமைச்சரான பின் பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பற்றி அவர் பெரிதும் அக்கறை காட்டினார்.

பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகள் பலர் சத்தான உணவு இன்றி மெலிந்தும், நோய்வாய்ப் பட்டும் இருப்பதைக் கண்டு மனம் பதைத்தார்.

ஏற்கனவே தமிழகப் பள்ளிகளில் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட, 'மதிய உணவுத் திட்டம்' நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எம்.ஜி.ஆர் அத்திட்டத்தை 1-7-1982 அன்று முதல் 'சத்துணவுத் திட்டம்' என்ற பெயரில் பயனுள்ள திட்டமாக மாற்றினார்.

அவர் சத்துணவுத் திட்டத்திற்காக 100 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தார். முட்டை, காய்கறிகள் அதிகம் கலந்த சத்துள்ள உணவு 5 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே சத்துணவுத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

"இந்தியப் பொருளாதார முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் என்பதை விட இன்றைய குழந்தைகளின் பசியும் ஆரோக்கியமும் அவசியம் என்பதை உணர்ந்தே

Scanned with CamScanner

## படுத்துக்கொண்டே வெற்றி

1984ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்திற்கும், தமிழக சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது.

அனைத்துக் கட்சிகளும் தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கின. தேர்தல் பிரச்சாரத்திலும் எதிர்க்கட்சிகள் எம்.ஜி.ஆரைப் பற்றிய வதந்திகளைக் கிளப்பி விட்டன.

Scanned with CamScan

அதாவது, "எம்.ஜி.ஆர் இறந்து விட்டார். ஆனால் அவரது பெயரைச் சொல்லி அ.தி.மு.க.வினர் ஓட்டு கேட்கிறார்கள். தாங்கள் வெற்றி பெற்றால் எம்.ஜி.ஆர் முதலமைச்சராகப் பதவி ஏற்பார் என்று சொல்வது நம்பத் தகுந்தது அல்ல!" என்பது போல எதிர்க்கட்சிக்காரர்களின் பிரச்சாரம் அமைந்திருந்தது.

ஆனால் அ.தி.மு.க.வினரோ, "எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் நலமோடுதான் இருக்கிறார். அவர் நிச்சயம் தமிழகம் திரும்பி வருவார். அவரது தலைமையில்தான் ஆட்சி நடைபெறப் போகிறது. எனவே மீண்டும் அ.இ.அ.தி.மு.க-விற்கு ஓட்டு அளிக்க வேண்டும்!" என்று பிரச்சாரம் செய்தனர்.

எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் நலமாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் அவரது புகைப்படத்தோடு கூடிய சுவரொட்டிகள் தமிழகமெங்கும் ஒட்டப்பட்டன.

கூடவே, அவர் அணியும் வெள்ளைத் தொப்பியும் கறுப்பு கண்ணாடியும் ஒவ்வொரு தொகுதிக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றைக் கண்ட பொதுமக்கள் எம்.ஜி.ஆரே வந்து பிரச்சாரம் செய்ததாக ஏற்றுக் கொண்டார்கள்.

தேர்தல் வந்தது. தேர்தல் முடிவுகள் வெளியாயின. அ.இ.அ.தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

1984 சட்டமன்றத் தேர்தலில் 153 இடங்களில் போட்டியிட்ட அஇஅதிமுக 132 இடங்களில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது.

எம்.ஜி.ஆர் ஆண்டிப்பட்டி தொகுதியில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். அமெரிக்காவில் ப்ரூக்ளீன்

Scanned with CamScan

# மக்கள் திலகம் மறைந்தார்!

1987ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி அதிகாலை! யாருமே எதிர்பார்க்கவில்லை! தமிழக மக்கள் ஓர் துயரச் செய்திஂயை அறிந்தனர். அதாவது, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மாரடைப்பால் காலமாகி விட்டார் என்னும் செய்தியே அது!

எம்.ஜி.ஆரின் மறைவுச் செய்தியை அறிந்த ஒவ்வொரு கட்சித் தொண்டனும், ரசிகரும் அவரது இல்லத்திற்கு விரைந்து சென்றனர். அவரது ரோஜாமலர் போன்ற முகத்தை ஒருமுறையேனும் பார்த்துவிட மாட்டோமா என்று பரிதவித்தனர்.

தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதியும், "என் நாற்பதாண்டு கால நண்பனின் முகத்தை இறுதியாக ஒருமுறை பார்க்க வேண்டும்!" என்று ராமாவரம் தோட்டத்திற்கு சென்று வந்தார்.

எம்.ஜி.ஆரின் பொன்னுடல், சென்னை ராஜாஜி ஹாலில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. பல கட்சிகளின் தலைவர்களும், பொதுமக்களும் எம்.ஜி.ஆரின் பூவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். பிறகு, அவரது உடல் சென்னை மெரீனா கடற்கரையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இன்று எம்.ஜி.ஆர். நல்லடக்கம் செய்யப்பட்ட இடம் அழகிய நினைவுச் சின்னமாக திகழ்கிறது. அதுபோல் எம்.ஜி.ஆரின் தியாகராய நகர் வீடும் அவரது நினைவைப் போற்றும் வகையில் நினைவு இல்லமாகத் திகழ்கிறது.

1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4ஆம் தேதி தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்ட

Scanned with CamScan